-5

# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109709

1. District : நீலகிரி
மாவட்டம்
PS: V&AC
காவல்நிலையம்
Year: 2022
ஆண்டு
FIR No.: 02
மு.த.அ. எண்
Date: 10·02·2022
நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 as ammended    Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: as PC (Ammendment) Act    Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: 2018    Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல் 07·02·2022
Date to : நாள் வரை 09·02·2022
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல்
Time to : நேரம் வரை Evening
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 10·02·2022
Time : நேரம் 09·00hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் —
Time : நேரம் —

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Typed Complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Kunda Taluk office, about 30km South.
Boat Number : முறைக் காவல் எண் —
(b) Address : முகவரி —
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K. சுந்தர்ராஜன்
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் K.B. கக்கமல்லா கவுடர் (லேட்)
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 51
(d) Nationality : நாட்டினம் Indian
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் விவசாயம்
(g) Address : முகவரி நரிமலை, கீழ்குந்தா-II கிராமம், குந்தா தாலுக்கா, நீலகிரி மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திருமதி. லதா, கிராம நிர்வாக அலுவலர், கீழ்குந்தா-II கிராமம், குந்தா தாலுக்கா, நீலகிரி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

KRRajan 10/2/2022 | Maguthylakshmi 10/2/22

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் பி. கீதாலட்சுமி
Rank: நிலை ....................No. எண் ..........
காவல் ஆய்வாளர்
உ.கு.த. பிரிவு, நீலகிரி மாவட்டம்.

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

**நீலகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 2/2022/AC/NI. 7 of Prevention of Corruption Act 1988 amended as Prevention of Corruption (Amendment) Act 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் விவரம்:**

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.**

**கனம் உதவி அமர்வ நீதிபதி மற்றும் ஊழல் தடுப்பு சட்டங்களுக்கான சிறப்பு நீதிபதி, உதகமண்டலம் அவர்கள் முன்பாக**

10.02.2022 ஆம் தேதி காலை சுமார் 09.00 மணிக்கு நீலகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் B.கீதாலட்சுமி ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, நீலகிரி மாவட்டம், குந்தா தாலுக்கா, கரியமலையை சேர்ந்த திரு.சுந்தரராஜன் என்பவர் அலுவலகம் வந்தார். அவரை அலுவலக நுழைவாயிலில் நிறுத்தி விசாரிக்க, அவர் புகார் கொடுக்க வந்திருப்பதாக தெரிவித்தார். அவரை கைகளை நன்கு சோப்பு போட்டு கழுவ செய்தும், அவரது உடல் வெப்ப நிலையையும், ஆக்சிஜன் அளவையும் சரிபார்த்தபோது, உடல் வெப்ப நிலையும், ஆக்சிஜன் அளவும் சீராக இருந்தது. அதன்பிறகு அவரை அலுவலகத்திற்குள் அழைத்து அவர் வைத்திருந்த புகார் மனுவை பெற்றேன். அந்த புகார் மனுவானது தமிழில் தட்டச்சு செய்யப்பட்டிருந்தது. நான் அந்த புகார் மனுவை படித்து பார்த்து, புகார் சம்பந்தமாக மனுதாரரிடம் விசாரித்தும், எதிரியின் நடத்தை குறித்து இரகசிய விசாரணை மேற்கொண்டதில், எதிரியானவர் அரசு பணி செய்வதற்கு லஞ்சம் வாங்குபவர் என்றும், குந்தா தாலுக்காவிற்குட்பட்ட கீழ்குந்தா-II கிராமத்தில் வசிக்கும் பொதுமக்களிடம் சிட்டாவில் பெயர் சேர்த்தல் மற்றும் நில அனுபோக சான்று போன்ற சான்றிதழ்கள் வழங்க பரிந்துரை செய்வதற்கு சம்பந்தப்பட்ட மனுதாரர்களிடம் லஞ்சமாக பணம் கேட்டு பெறுவதாக தெரியவருகிறது. மேலும், புகார்தாரருக்கும் எதிரிக்கும் தனிப்பட்ட முறையில்

தொடர்ச்சி–2 ஆம் பக்கம்

Geethalakshmi
10/2/22

ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு ஏதுமில்லை என்றும் தெரியவந்தது. மேலும், புகாரின் உண்மை தன்மையையும், நான் மேற்கொண்ட இரகசிய விசாரணையிலிருந்தும் எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பதாக தெரியவந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று **10.02.2022** ஆம் தேதி காலை **09.30** மணிக்கு உதகமண்டலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.2/2022/AC/NI u/s 7 of Prevention of Corruption Act 1988 amended as Prevention of Corruption (Amendment) Act 2018–ன் படி மேற்படி எதிரி திருமதி.லதா, கிராம நிர்வாக அலுவலர், கீழ்குந்தா–II கிராமம், குந்தா தாலுக்கா, நீலகிரி மாவட்டம் என்பவர் மீது வழக்கு பதிவு செய்தேன். புகார்தாரரின் புகாரின் விவரம் பின்வருமாறு: நாள்.10.02.2022 அனுப்புநர் K.சுந்தர்ராஜன், த/பெ.K.B.கக்கமல்லா கவுடர் (லேட்), கரியமலை, கீழ்குந்தா-II கிராமம், குந்தா தாலுக்கா, நீலகிரி மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நீலகிரி மாவட்டம், உதகமண்டலம். அய்யா / அம்மா, நான் நீலகிரி மாவட்டம், குந்தா தாலுக்கா, கீழ்குந்தா–II கிராமத்திற்குட்பட்ட கரியமலையில் எனது குடும்பத்தாருடன் குடியிருந்துக் கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். எனது சித்தப்பா திரு.K.S.அர்ஜுனன் அவர்கள் கடந்த **2007** ஆம் ஆண்டு இறந்துவிட்டார். அவருடைய மனைவி திருமதி.சரக, மகன்கள் அசோக், அருண் மற்றும் மகள் அனு ஆகிய நான்கு பேர் திரு.K.S.அர்ஜுனன் அவர்களுடைய வாரிசுதாரர்கள் ஆவார்கள். அவர்களில் திருமதி.சரசு மற்றும் அசோக் ஆகியோர் ராஜஸ்தானில் உள்ளார்கள், மகள் அனுவுக்கு திருமணமாகி கோயமுத்துாரில் உள்ளார், திரு.அருண் தற்போது கரியமலையில் குடியிருந்துக் கொண்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநராக வேலை செய்து

தொடர்ச்சி–**3** ஆம் பக்கம்

Amuthalakshmi 10/2/22

வருகிறார். எனது சின்னம்மா மற்றும் அவரது மகன்கள் அருண், அசோக் ஆகியோர் என்னை கேட்டுக் கொண்டதன்படி எனது சித்தப்பா திரு.K.S.அர்ஜுணன் அவர்களுக்கு சொந்தமாக கீழ்குந்தா–II கிராமத்தில் உள்ள தேயிலை தோட்டங்கள் மற்றும் விவசாய நிலங்களுக்கான வருவாய்த் துறை ஆவணமான சிட்டாவில் அவர்கள் நான்கு பேரின் பெயரை சேர்ப்பதற்காக கடந்த 07.02.2022 ஆம் தேதி மாலை குந்தா தாலுக்கா அலுவலக இ.சேவை மையத்திற்கு சென்று அருண் அவர்களின் பெயரில் மேற்படி நான்கு பேரின் பெயரை சேர்ப்பதற்காக ஆன்லைன் மூலம் அனைத்து ஆவணங்களுடன் விண்ணப்பித்து, 500/– ரூபாய் செலுத்தி நான்கு விண்ணப்பங்களின் நகல்களை பெற்றேன். அந்த விண்ணப்பங்களின் எண்கள் 1)2022/0103/11/062493, 2)2022/0103/11/062494, 3)2022/0103/11/062495 மற்றும் 4)2022/0103/11/062496 ஆகும். நான் விண்ணப்ப நகல்களை பெற்றவுடன் என்னை கீழ்குந்தா-II கிராம நிர்வாக அலுவலர் திருமதி.லதா அவர்களை சென்று பார்க்குமாறு இ.சேவை மையத்திலிருந்தவர்கள் சொன்னார்கள். அதனால் நான் அன்றைய தினம் மாலை சுமார் 4.00 மணிக்கு குந்தா தாலுக்கா அலுவலகத்தில் இருந்த கீழ்குந்தா-II கிராம நிர்வாக அலுவலர் திருமதி.லதா அவர்களை பார்த்து நான் எனது சித்தப்பாவின் வாரிசுகளின் பெயரை சிட்டாவில் சேர்ப்பதற்காக இ.சேவை மையத்தில் விண்ணப்பித்துள்ளதாக தெரிவித்து அதை பார்க்குமாறு கேட்டேன். அதற்கு கீழ்குந்தா-II கிராம நிர்வாக அலுவலர் திருமதி.லதா அவர்கள், என்னிடம் 5,000/– ரூபாய் பணம் லஞ்சமாக கொடுத்தால்தான் விண்ணப்பத்தை பரிசீலித்து பரிந்துரை செய்வேன் என்று சொன்னார், நான் அவரிடம் அவ்வளவு பணம் இல்லை என்று சொன்னதற்கு சரி 4,000/– ரூபாய் கொடுங்கள் என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம் சரி என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டேன். பிறகு 09.02.2022 ஆம் தேதி மாலை சுமார் 3.00 மணியளவில் நான் குந்தா தாலுக்கா அலுவலகத்திற்கு சென்று கீழ்குந்தா-II கிராம நிர்வாக

தொடர்ச்சி–4 ஆம் பக்கம்

Dr. Gayathri (?) Lakshmi 10/2/22

அலுவலர் திருமதி.லதா அவர்களை பார்த்து அருண் அவர்களின் விண்ணப்பங்களைப்பற்றி கேட்டபோது தனக்கு 4,000/– ரூபாய் கொடுத்தால்தான் விண்ணப்பங்களை பரிசீலிப்பதாக கண்டிப்புடன் கூறிவிட்டார். அந்த சமயத்தில் என்னிடம் பணம் இல்லாததால் நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். நான் வீட்டிற்கு சென்று யோசித்து பார்த்தபோது அரசு பணியை செய்வதற்கு லஞ்சமாக பணம் கேட்கும் கீழ்குந்தா-II கிராம நிர்வாக அலுவலர் திருமதி.லதா அவர்களுக்கு லஞ்சமாக பணம் கொடுக்க எனக்கு விருப்பமில்லாததால், நான் அருணிடம் லஞ்ச ஒழிப்புத் துறையில் புகார் அளிப்பதாக சொல்லிவிட்டு, புகார் மனு தயார் செய்து அவர் லஞ்சமாக கேட்ட 4,000/– ரூபாய் எடுத்துக்கொண்டு வந்து தங்களிடம் புகார் மனு அளிக்கிறேன். எனவே, என்னிடம் 4,000/– ரூபாய் லஞ்சமாக பணம் கேட்ட கீழ்குந்தா-II கிராம நிர்வாக அலுவலர் திருமதி.லதா அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு தங்கள் உண்மையுள்ள Sd/-xxxxx 10.02.2022 (K.கந்தர்ராஜன்). Submitted: Received the above complaint on 10.02.2022 at 09.00 hrs and after conducting a preliminary enquiry, registered a case in V&AC, The Nilgiris Cr.No.2/2022/AC/NI1 u/s 7 of PC Act 1988 amended as PC (Amendment) Act 2018 on 10.02.2022 at 09.30 hrs. Sd/-xxxxx 10.02.2022 Inspr, VAC, The Nilgiris. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி அவர்கள், ஊழல் தடுப்பு சட்டங்களுக்கான நீதிமன்றம், உதகமண்டலம், நீலகிரி மாவட்டம் அவர்களுக்கு அனுப்பி வைத்தும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தேன்.

(B.கீதாலட்சுமி)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
உதகமண்டலம், நீலகிரி மாவட்டம்.